## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
## குருவின் எண்ணம், சிஷ்யனின் பலம்.

---

இன்று பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் FAREWELL DAY நிகழ்வது போல, அக்காலத்தில் பாரதநாட்டில் குருகுலப் பள்ளிகளிலும் சிஷ்யர்களுக்கு ஒரு விழாவை குரு நடத்தி ஆசீர்வதித்து, பட்டம் தந்து வீட்டுக்கு அனுப்புவார். அதற்கு "சமாவர்த்தன்" என்று பெயர்.

இமயமலைச் சாரலில் சத்ய ஜாபாலி என்ற மிகச் சிறந்த குரு இருந்தார். அவரிடம் கல்வி கற்க பாரத தேசம் முழுக்க இருந்து மாணவர்கள் வருவது வழக்கம்.அவரிடம் சதா பாடம் கேட்வேண்டும் என்று தீராத ஆசையுடன் அவர் பின் அவர்கள் சுற்றுவர். அப்படிப்பட்ட சிறந்த ஆசிரியர் சத்ய ஜாபாலி.

ஒரு முறை அவர் சமாவர்த்தன் நடத்தினார். மாணவர்களின் திறமைகளை மனதாரப் பாராட்டி, வாழ்த்தி, பட்டம் கொடுத்து வீட்டுக்கு அனுப்பினார். மிகச் சிறந்த மாணவன் ஒருவனை மட்டும் ஆசீர்வதிக்காமல்,"நீ இன்னும் பாடங்கள் பல கற்கவே இல்லை, இங்கேயே இரு!" என்று சொல்லி விட்டார். அவன் கவலைப் பட்டான். அவன் பெயர் உபகோசலன்.
குருவின் மனைவி, "குரு சொல்வதில் ஏதோ ஒரு ரகசியம் இருக்கிறது. நீ பொறுமையுடன் இங்கெ இரு!" என்று அறிவுரை கூறினாள்.

உபகோசலனும் பொறுமையுடன் மீண்டும் குருகுலத்தில் அவர் சொல்லும் காரியங்களைச் செய்து கொண்டு அமைதியுடனும் விழிப்புணர்வுடனும் இருக்கிறான். காலம் செல்கிறது...ஒரு நாள்;

குரு,"தம்பி! நான் பத்ரிகாஸ்ரமம் சென்று பெருமாளை வணங்கி வர வேண்டும். நான் வரும் வரை நம் குருகுல ஆஸ்ரமத்தில் உள்ள ஹோமகுண்டம் அணையாமல் நீ நித்தம் ஹோமங்கள் செய்து வா!" என்று கூறிச் சென்றும் விடுகிறார்.

உபகோசலனும் தினம் தினம் ஹோம காரியங்கள் செய்து, மிக ஸ்ரத்தையுடன் அக்னி தேவனுக்கு உரிய மந்த்ரங்களை விழிப்புணர்வுடன் ஜெபித்து வருகிறான். ஒரு நாள் இரவு வெகுநேரம் குருமாதாவுக்கு கால் பிடித்து விட்டுத் தூங்கியதால், காலை விடிந்தும் அவன் எழவில்லை. அப்போது யாரோ அவன் அருகில் நின்று அவனை எழுப்புவதை உணர்ந்தான். கண் விழிக்கிறான்...அதோ மிக்க தேஜஸுடன் அக்னி பகவான் அவன் முன் ஸ்வாஹா தேவியுடன் காட்சி தந்து,

"தம்பி! ஏன் இன்னும் நீ எழவில்லை? அதோ அக்னி குண்டம் அணைய இருப்பதைப் பார். உன் குருவின் வாக்கை மறந்து விட்டாயா?" என்று அக்னி சொல்ல,

"ஸ்வாமி! இதைக் கூறவாஎன் முன் வந்தீர்கள்?! எல்லாம் என் குருவின் அருள்! அனேக கோடி வந்தனம்!" என்றான் உபகோசலன்.

அதற்கு அக்னி,"தம்பி! குருவின் வார்த்தைக்கு ஏற்ப பொறுமையுடன் நீ எதைப் பற்றியும் யோசிக்காமல் என் மூல மந்த்ரங்களை ஜெபித்த பலன் என் தரிசனம்.முக்கியமான ஒரு மந்த்ரத்தை உனக்கு உபதேசம் செய்கிறேன். அதன் உட்கருத்தை உன் குருவிடம் தெரிந்து கொள்!" என்று உபதேசம் செய்தார் அக்னி.

நடந்த விஷயங்களை குருவின் மனைவியிடன் இவன் கூற, "எனக்கு மகன் ஸ்தானத்தில் இருந்து கால் பிடித்து என் கால் வலியைத் தீர்த்த பலன் உனக்கு என்றுமே உண்டு" என்று ஆசீர்வதிக்கிறாள். சில நாட்களில் சத்ய ஜாபாலியும் திரும்புகிறார், விஷயத்தை அறிந்தவுடன்,

"தம்பி! நீ வாழ்க. மிகச் சிறந்த மாணவன் நீ. அது எனக்கு என்றோ தெரியும். பின் ஏன் உனக்கு சமாவர்த்தன் செய்யவில்லை தெரியுமா? அக்னி தேவனின் தரிசனமும் அவன் மூலம் மிக முக்கிய ஒரு மந்த்ரமும் உனக்குக் கிடைக்க வேண்டும் என்று நான் நினைத்தேன். அதனால் தான் உன்னை இருக்க வைத்தேன். அக்னி தேவன் மூலம் நீ பெற்ற மந்த்ரத்தைக் கொண்டு நாட்டுக்குள் தீயவர்கள் தொல்லை தந்தால் அவர்களை விரட்ட முடியும். அதைச் செய்து மக்களுக்கு சேவைகள் பல செய்க! இன்று உனக்கு மிக விசேஷமாக சமாவர்த்தன் செய்கிறேன்!" என்று கூறி அவனை ஆசீர்வதித்து வழியனுப்பினார். இது வல்லவா குருவின் அன்பு?

ஓம் சத்குருப்யோ நமஹா!